Registered as a News Paper

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 23 (06-02-1992) வியாழக்கிழமை ஓசை: 353

## ஆரம்ப நீதிமன்று வடமராட்சியில் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதிக்கான ஆரம்ப நீதிமன்று யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களால் கடந்த செவ்வாய்க் கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட தளபதி திரு. செந்தாளன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் மங்கல விளக்கை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.



யாழ். குடாநாட்டில் நேற்று நடைபெற்ற வெகுசன எழுச்சிப் போராட்டத்தில் பங்குபற்றிய ஒரு தொகுதி மக்களையும், யாழ். அரச அதிபரிடம் தமிழீழ வெகுசன அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜரை கையளிப்பதையும் படத்தில் காணலாம்.

# யாழ்.குடாநாட்டில் அரசுக்கு எதிராக அணிதிரண்ட மக்கள் சமுத்திரம்

## வரலாறு காணாத வெகுசன எழுச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஒடுக்கு முறைக்கெதிராக பல்லாயிரக்கணக்கான யாழ். குடாநாட்டு மக்கள் அணிதிரண்டு நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர். பல பகுதிகளிலும் இருந்து அணி அணியாக வந்த மக்கள் யாழ். செயலகப்பகுதியை அடைந்த போது அப்பகுதி சன சமுத்திரமாகக் காணப்பட்டது. வரலாறு காணாத இவ்வெகுசன ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் கிளர்ந்தெழுந்த மககள் கூட்டம் சிறிலங்கா அரசுக்கு எதிராக ஆவேசம் கொண்டு கோஷங்களை எழுப்பியவாறும், கோஷங்கள் பொறிக்கப்பட்ட பெரிய அளவிலான பதாகைகளைத் தாங்கிய படியும் ஆர்ப்பாட்டம் செய்து அணிவகுத்து யாழ். செயலகத்தை நோக்கிப் படை எடுத்தனர்.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், மற்றும் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ். கடற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அட்டூழியங்களை நிறுத்து: பொருள் தடையை நீக்கு

### எட்டு அம்ச மகஜர் கையளிப்பு

இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியன மக்கள் பற்றி சிறிதளவும் கவலைப்படாமல் கண்டிக்கத் தக்க முறையில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் கண்மூடித்தனமான குண்டு வீச்சு, கடற்படைக் கப்பல்கள் கடலோரக்கிராமங்கள் மீது பீரங்கித் தாக்குதல், மேற்கொள்வது, இராணுவ முகாம்கள் அடுத்த கிராமங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்துவது என்பன அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உணவிற்குத் தடை விதிப்பு; போருக்குப் படை குவிப்பு

(யாழ்ப்பாணம்)

''உணவிற்குத் தடை விதிப்பு, போருக்குப் படை குவிப்பு'' இது நேற்று குடாநாடு தழுவி நடாத்தப்பட்ட வெகுஜனப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் சிறிலங்கா அரசிற்கு எதிராக உரத்த குரலில் எழுப்பிய கோஷங்களில் ஒன்று.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட மாபெரும் வெகுஜனப் போராட்டத்தின் போது ஏந்திச் சென்ற சுலோகங்கள் வருமாறு:

சமாதானத் தீர்வினிலே சாந்தி பிறக்கும். இராணுவத் தீர்வினிலே இரத்த ஆறுஓடும், தமிழீழம் தமிழ் மககளின் சொத்து, எங்கள் வாழ்விடங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை - நெல்லியடி

## காவல்துறை பணிமனை வதிரியில் திறக்கப்பட்டது

பருத்தித்துறை, நெல்லியடி பிரதேசங்களுக்கான காவல் பணிமனையை கடந்த 4 ஆம் திகதி கடற்புலிகளின் தளபதி திரு. சூசை அவர்கள் திறந்து வைத்தார். இந்த வைபவத்தில் கடற்புலிகள் தளபதி சூசை தேசியக் கொடியையும் காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் காவல்துறையின் கொடியையும் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணி, மகளிர் முன்னணி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வதிரியில் அமைந்துள்ள இந்த காவல் பணிமனை 24 மணிநேரமும் செயற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமற்போனோர் பற்றி உடன் விசாரணை செய்க

### மேற்குலக தூதுவர்கள் வற்புறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை காணாமல் போனோர் பற்றி உடனடியாக விசாரணை மேற்கொண்டு அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பதவி நீக்கக்கோரி கொழும்பிலுள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்கள் சிறிலங்கா அரசைக் கோரியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் இலங்கையில் பன்னிரெண்டாயிரம்பேர் காணாமல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப் பத்திரிகை ஏப்ரலிலேயே தாக்கலாகும்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள்தலைவர் வே. பிரபாகரன். மற்றும் பொட்டம்மான் ஆகியோருக்கு எதிரான குற்றப் பத்திரிகைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலேயே தாக்கல் செய்யப்படவுள்ளன. இந்தக் குற்றப் பத்திரிகைகளை தயாரிக்கும் பணியில் விசேட புலனாய்வுக் குழுவினர் தற்போது ஈடுபட்டிருப்பதாக இக்குழுவின் தலைவர் கார்த்திகேயன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### அருள்ராஜ்

மட்டக்களப்பு மாவட்டம் பெரியவெட்டுவான் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை அருள்ராஜ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பிரம்மஞானி எழுதும்

**'பிரேமதாசா எப்படிப்பட்ட மனிதர்'**

என்னும் கட்டுரைத் தொடர் நாளைவெளி வரும்.

## நினைவலைகள்



### மேஜர் பிரசாத்

(கந்தசாமி முரளீதரன்)

(முன்னாள் வட்டுக்கோட்டை பிரதேசப் பொறுப்பாளரும் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளரும்)

பிறப்பு 18- 9- 1962 வீரச்சாவு - 6- 2. 1988

சின்னதாய் சிரித்து, மெல்லச்
சிரசினை அசைத்தவாறு;
முன்னதாய் இந்த மண்ணில்,
''முரளி'' நீ திரிந்த காட்சி
மின்னலாய் மறைந்து எம்மை
மிகுதியும் வருத்துமாறு,
என்னதீங் கிழைத்து விட்டோம்?
எங்களைப் பிரிந்து சென்றாய்!
''அழிந்தது இயக்கம்''! என்றே
அந்நியர் சூழ்ந்து நின்று;
மொழிந்ததைப் பொய்மையாக்கும்
முயற்சியில் உயர்ந்து வென்றாய்!
இழிந்தவர் செய்கையாலே,
இறந்து நீ எரிந்த போதும்;
பொழிந்திடும் கவிதை மாரி
போற்றிடும் உன்னை வாரி!!

(சி/3889) -உறவினர்கள், நண்பர்கள்

## 45 ஆம் நாள் வீர அஞ்சலி

வீர ஜனனம் 09 - 06 - 1987



வீரச் சாவு 24 - 12 - 1991

(சி 3806)

### வீரவேங்கை இளம் பரிதி (ராஜ்)

(கைலாயநாதன் சிவகணேஷன்)

மழலை மொழி மாறாத ஈழத்தமிழ் மறவா!
எமது செல்வமே அன்பு ராஜா!
உமது அன்னை பிறந்தது கோலாலம்பூர் நாட்டில்,
உமது தந்தை பிறந்தது தமிழ் ஈழமண் இணுவில்
ஒரு அக்கா ஒரு தம்பி நீ எங்கள் குலவிளக்கு
பால் மணமோ மாறமுன்னர் மண்மீட்கப் புறப்பட்டாய்!
சாதனைகள் புரிந்திட்டாய் சென்றது ஒன்றரையாண்டு
தமிழ்ஈழம் மலரும் முன்னே உரமானாய் தமிழ் மண்ணில்
உன் எண்ணம் ஈடேறும் தமிழ் அன்னை விலங்கொடியும்
தமிழ் ஈழம் விடிகாலை வெகுதூரம் இல்லையடா.
விடிகாலை வேளையிலே உன் ஒளியும் எங்களுக்கு
காலை இளம் பரிதியடா,

உமது ஆன்மா சாந்தி பெற எமது கண்ணீர்ப் பூக்களால்இறைவனை வேண்டி அஞ்சலி செய்கின்றோம்.

உன் பிரிவால் கலங்கி வாடும்
அன்புப் பெற்றோர், அக்கா,
அன்புத் தோழர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை யோகன்

(கந்தையா யோகநாதன்)

வீரஜனனம்
3.11.1969

வீரமரணம்
6.2.1989

யோகா எங்கள்
சிந்தைதனில் நிறைந்த
செல்வமே!
யோகா உனைப் பிரிந்து
ஆண்டு மூன்றுஆனாலும்
யோகா உந்தன் செம்
பவளத் திருமேனி நம்
கண்ணில்
யோகா என்றும் மறை
யாதையா நம் பிறப்புக்
கெல்லாம்!

உன் பிரிவால் ஆறாத் துயரில் நீறாகும் நெஞ்சங்கள்

அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமாமார், மாமிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

யோகன் வீதி,
திருநெல்வேலி, தெற்கு.
(சி-3885)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு.பொன் மகேந்திரன்

தோற்றம் 21.03.1032
மறைவு 18.01.1991
திதி 06.02.1992

எங்கள் குலவிளக்காய்; சிறந்த குடும்பத் தலைவனாய்; பாசம் மிக்க தந்தையாய், நல்லாசிரியனாய், கடமையுணர்வு மிக்க உப அதிபராய், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியோடு தன்னைப் பிணைத்துக் கொண்டவராய் எல்லாம் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையை நினைவு கூருகின்றோம்.

தாய், மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்

(2187)

## நினைவு கூருகின்றோம் 1992-02-06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறையில் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது சிறிலங்காப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**சேகர்** (அப்புக்குட்டி முத்துசேகர் - சந்திரங்கூடல், பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

பரந்தனில் சிறிலங்காப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரச்சாவெய்திய

**பாலு/சிக்காக்கோ** (முருகேசு ஜெயகாந்தன்-பருத்தி ஓலை. கந்தரோடை, சுன்னாகம்)

பரந்தனில்சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 பொது மக்கள்,

வவுனியாவில் சுட்டுக்கொல்லப்பட்ட 2 பொதுமக்கள்,

பருத்தித்துறையில் சுட்டுக்கொல்லப்பட்ட 2 பொது மக்கள்,

தவசிக்குளத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன்

பொலிகண்டியில்சுட்டுக்கொல்லப்பட்டபொதுமகன்

1987 ஆம் ஆண்டு வசாவிளானில் சிறிலங்காப்படையினருடனான மோதலின்போது வீரச்சாவெய்திய

**வெள்ளை** (செபமாலை ரெஜினோல்ட்ஜோன்குமார் இளவாலை)

**அமுதன்/சிவா** (பேதுருப்பிள்ளை இராஜேஸ்வரன்-ஊரெழு)

**கபில்** (பரமசாமி உருத்திரசிங்கம் - காரைநகர்)

1988 ஆம் ஆண்டு பனிப்புலத்தில் இந்தியப்படையால் கைது செய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

**மேஜர் பிரசாத்** (கந்தசாமி முரளிதரன்-'அஜந்தா' மூளாய்)

1989 ஆம் ஆண்டு ஈச்சிலம்பத்தையில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவெய்திய

**டெஸ்மன்** [செல்லத்துரை ரவீந்திரன் – மூதூர், திருக்கோணமலை]

வவுனியா, பூவரசங்குளத்தில் இந்தியப்படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**நேசன்** [சந்தசாமி நாகராசா - கட்டைக்குளம், வவுனியா]

கொக்குவிலில் இந்தியப்படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் ரவிராஜ்** (ராஜசவுந்தரலிங்கம் கிரிதரன்-ரவிராஜ் வீதி, கொக்குவில்)

**யோகன்** [கந்தையா யோகநாதன் - மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு]

1990 ஆம் ஆண்டு தேச விரோதிகளின் முகாமைத் தாக்கி விட்டுத் திரும்பி வரும்போது ஜமாலியாவில் ஏற்பட்ட படகு விபத்தின் போது எம்மைப்பிரிந்த

**மேஜர் கமல்** (கோ.அருளானந்தம் - திரியாய், திருக்கோணமலை)

**மேஜர் மதி** (அருளம்பலம் வரதராஜன்-குச்சவெளி, திருக்கோணமலை)

**மேஜர் சுரேஷ்** (சின்னத்தம்பி தயாபதி-நிலாவெளி, திருக்கோணமலை)

**கப்டன் நேமி** (சண்முகம் பஞ்சலிங்கம் - குச்சவெளி, திருக்கோணமலை)

**கப்டன் அன்ரன்** (கு. இராமநாதன் – குச்சவெளி, திருக்கோணமலை)

**கப்டன் ரகு** (சண்முகராசா பிரேம்குமார்-திரியாய், திருக்கோணமலை)

**கப்டன் மகேஷ்** (சுப்பிரமணியம் முகுந்தன் -திருக்கோணமலை)

**கப்டன் குகன்** (கந்தசாமி மகேந்திரன்-கரவெட்டி)

**லெப். கிருபன்** (குமாரசாமி உதயகுமார் - சாம்பல் தீவு, திருக்கோணமலை)

**லெப். கில்பேட்** (குவாநாட் கொன்ஸ்ரன் ரைன்ஸ் சாம்பல்தீவு, திருக்கோணமலை)

**2-ம் லெப். சங்கர்** (இராசரத்தினம் செல்வகுமார் அராலிவடக்கு, வட்டுக்கோட்டை)

**2-ம் லெப். சாந்தன்** (நைனா முகைதீன் நியாஸ்-நிலாவெளி, திருக்கோணமலை)

**2-ம் லெப். அசோக்** (பொன்னுத்துரை லிங்கேஸ்வரன் - திருக்கோணமலை)

**2-ம் லெப். நவா** (கோபாலபுரம் திருக்கோணமலை)

**பைரவன்** (இராமசாமி கணேசன்-திருக்கோணமலை)

**காந்தி** (சித்திரவேல் சிவராசா - திருக்கோணமலை)

**விஜி** (பொன்னையா லம்போதரன்-குச்சவெளி. திருக்கோணமலை)

**சின்னமதி** (விஸ்வலிங்கம் செல்வேந்திரன் - கங்குவேலி, திருக்கோணமலை)

**குமார்** [புண்ணியமூர்த்திசதீஸ்வரன்-திருக்கோணமலை)

**கருணா** (இராசையா வரதராஜன்-நிலாவெளி, திருக்கோணமலை)

**சின்ன சுரேஷ்** (துரையப்பா இராசேந்திரன்-சாம்பல்தீவு, திருக்கோணமலை)

**ஜொனி** (வின்சன்ற் ஒஸ்வேல் நிமல்ராஜ் - திருக்கோணமலை)

1991 ஆம் ஆண்டு தச்சன் காட்டுச் சந்தி சிறிலங்காப்படை மினிமுகாம் தாக்குதலில் காயமுற்றிருந்து வீரச்சாவெய்திய

**சுக்ளா** (பாலசுப்பிரமணியம் முகிலன் - 260 கச்சாய் வீதி, சாவகச்சேரி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

(சி/3893)

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

## வலைப்பந்தாட்ட / உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்பட உள்ள உதைபந்தாட்ட/வலைப் பந்தாட்டசுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகளின் விண்ணப்ப முடிவுத் திகதி: 20.02.1992

ரூபா 50/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். முடிவுத் திகதிக்குப் பிந்திய விண்ணப்பப் படிவங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் பின்வருவோரிடம் தொடர்பு கொள்ளலாம்.

திரு. சொ. விஜயராஜா,
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

திரு. றோகன் ராஜசிங்கம்,
சக்திஅகம், காங்கேசன்துறை வீதி,
மருதனாமடம்.

திரு. ந. சிறீகாந்தா,
மணற்காட்டு ஒழுங்கை, மட்டுவில் தெற்கு.

திரு. பா. கிருபாகரன்,
''அன்னை இல்லம்''.
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

திரு. த. றி. நித்திலநாயகம்,
327/9, கதிரடிறல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

திரு. செ. பிறேமதாசன்,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
யாழ். மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

## மாஜி இராணுவத்தினரால் மக்களுக்குத் தொல்லை

(மாத்தளை)

முன்னாள் இராணுவத்தினர் பலர் பாலியல் வன்முறை, களவு மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடமையிலுள்ள போது இராணுவத்தை விட்டு ஓடியவர்களும், பயிற்சிக் காலத்தில் இராணுவத்திலிருந்து விலகியவர்களுமே இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பதாக இராணுவப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன இவர்களைக் கைது செய்ய உதவுமாறு இராணுவப்பொலிஸ் சாதாரண பொலிஸைக்கோரியிருப்பதாக சொல்லப்படுகிறது. மாஜி இராணுவத்தினர் இழைக்கும் குற்றச் செயல்களினால் பொது மக்கள் பெரிதும்பாதிக்கப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தை விட்டு ஓடிய சுமார் 27 பேர் மாத்தளைப் பொலிஸ் பிரிவில் தலைமறைவாக வாழ்வதாக மாத்தளைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாத்தளைப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் இவர்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

ஏலவே பத்துப் பேர் கைது செய்து மாத்தளைப் பொலி செய்யப் பட்டுள்ளார்கள் என் சில் சரணடையலாம் என்றும் றும், மற்றவர்கள் தாமாகவே அவர் தெரிவித்தார்.

### மீண்டும் தலைவராக நடனசிகாமணி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகாசபை கூட்டம் திரு.சோ. தண்டபாணி தேசிகர் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

முன்பு 3 வருடங்களாக தலைவராக இருந்து வந்த வ. இ. நடனசிகாமணி மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடன் உபதலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 14 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

### வெளியார்

ரம்புக்வெல்லே ஸ்ரீவிபஸ்ஸி தேரரை சந்தித்து உரையாடியபோது தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது பிரிட்டிஷ் தூதுவர் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட்டு விடுமென்ற நம்பிக்கையினை வெளிப்படுத்தியதுடன் நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படவேண்டும் எனவும் தனது ஆவலை மகாநாயக்க தேரரிடம் தெரிவித்தார்.

### ஊவா

தொழிற்சங்க போட்டி மறுபுறம், இங்கு அலலற் படும் மக்களின் மன நிலைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. தங்களது போட்டிகளின் களமாக, இதன் மூலம் எவரெவரது மனங்களைக் குளிர வைத்து அரசியல் இலாபம் தேடலாம் என்பதே பிரதான நோக்கமாக இருப்பதையும் காண முடிகின்றது.

அதேவேளையில் இந்நிலையைப் பயன்படுத்தி பணம் கறக்கும் கோஷ்டி மற்றொரு புறம்.

மொத்தத்தில் மக்கள் பல வேறு வகையில் பல்வேறு மட்டங்களினால் கசக்கிப் பிழியப்படுகின்றனர்.

இவை அனைத்திலும் இருந்து விடுதலையை, விமோசனத்தையே இன்று ஊவாப் பகுதி வாழ் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதனை இதய சுத்தியுடன் யார் நிறைவேற்றுகின்றனரோ அவர்கள் இம்மக்களுக்கு இரட்சகர்களே.

- நன்றி வீரகேசரி 2-2-92

### மங்களகரமான திறப்புவிழா

தேநீர் குளிர்பான சாலை
07-02-92 வெள்ளிக்கிழமை
காலை 8·30 மணியளவில்
மங்களகரமாக திறந்துவைக்கப்படும்.

★ சிற்றுண்டி வகைகள் ★ தேநீர், கோப்பி
★ குளிர்பான வகைகள்

**இன்சுவை**
மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(சி 3896) (எழிலகம் முன்பாக)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 30 . 10 . 1971

தமிழீழ மண்ணில் 24 . 12 . 1991

வீரவேங்கை சந்துரு
(செல்லையா சுகுமார்)

(அச்சுவேலியில் நடைபெற்ற எறிகணைத் தாக்குதலில் இவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்)

ஓ...வீரனே!
எங்கள் மண்ணில் உன்பெயர் எழுதி வைக்கப்படும்
நீ மடியவில்லையடா! உன்கதை முடியவில்லையடா!
விடுதலை புலியாய் நீ வாழ்ந்த நாளை
வெடிகுண்டின் நடுவில் நின்ற உன்தோளை
காலமெல்லாம் புலிக்குகையில் நீ தங்கினாய்
கண் மூடி இன்று படமாய் தொங்கினாய்
பூமாலை உன்படத்தில் போட்டார் பார்த்தோம்
நீ மடியவில்லையடா, உன் கதை முடிய வில்லையடா

இவரின் அந்தியேட்டி 06.02.92 (இன்று) நடைபெறுவதால் உறவினர்களையும், நண்பர்களையும், சகபோராளிகளையும், ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் படியும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளும் படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இல 4,
ஈச்சமோட்டை றோட்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்
தகப்பன், தாய்,
சகோதரர்கள்.
(2188)

## பாக். உருக்காலைக்கு அமெரிக்கா ஆட்சேபம்

பாகிஸ்தான்புதியஉருக்காலை ஒன்றை அமைக்கும் ஆஸ்திரியாவின் திட்டத்திற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்த உருக்காலையில் தயாரிக்கப்படும் இரும்புப் பொருள்கள் அணு ஆயுதத் தயாரிப்பிற்கு பாகிஸ்தான் பயன்படுத்தலாமென அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது. ஆஸ்திரியாவின் உதவியுடன் அமைக்கப்படவிருந்த இத்திட்டம்பாகிஸ்தான் அணுத்திட்டத்தின் தலைவரான அமானுல்லிலாகான் என்பவராலேயே தயாரிக்கப்பட்டதாகபத்திரிகையொன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
10. 06. 1964

வீரச்சாவு
06. 02. 1990

கப்டன் குகன் (கந்தசாமி மகேந்திரன்)

தமிழீழ மண்ணில் உதித்தெழுந்த புதுநிலவே !
தமிழர்தம் விடுதலைக்காய் தகித்தெழுந்த பெருநெருப்பே !
அடிமை விலங்கொடிக்க ஆர்த்தெழுந்த வீர மலையே !
கொடியோர் செயலறுக்கக் கொதித்தெழுந்த மாவீரா !
நின்றன் இலட்சியக் கனவெல்லாம் இன்று
நனவாய் நடப்பதால் நின் ஆத்மா சாந்தியுறும் !
இமயத்தின் ஒளிவிளக்காய் நின் புகழும் ஒளிரட்டும் !
உயிருள்ளவரை உன்னை உள்ளத்தில் பூட்டிவைத்து
நன்றியுணர்வோடு நினைவஞ்சலி செய்கின்றோம் !
கரணவாய் மட்டுமல்ல இந்தக் காசினி முற்றும்
அல்லும் பகலும் அயராது பணிசெய்வோம்
உந்தன் ஆத்மசாந்திக்கு இன்றும் பிரார்த்திக்கின்றோம்
இவருடன் வீரச்சாவு அடைந்த ஏனைய இருபத்திரண்டு வேங்கைகளுக்கும் எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

மோகன்மாஸ்ரர் வீதி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.
(2165)

## ஓராண்டு நிறைவு

எமது ஓராண்டு நிறைவையொட்டி வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், விநியோகஸ்தர்கள் அனைவரும் எமக்களித்த ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அத்துடன் தொடர்ந்தும் உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(சி/3891)

# ஈராண்டு நினைவு அஞ்சலி



மேஜர் கமல்
(சோ. அருளானந்தம்)
திரியாய்
29. 04. 1968



மேஜர் மதி
(அ. வரதராஜன்)
குச்சவெளி
09. 06. 1964



மேஜர் சுரேஸ்
(சி. தயாபதி)
நிலாவெளி
1964



கப்டன் நேமி
(ச. பஞ்சலிங்கம்)
குச்சவெளி
22. 07. 1968



கப்டன் அன்ரன்
(கு. இராமநாதன்)
குச்சவெளி
30' 01 1963



கப்டன் ரகு
(ச. பிரேம்குமார்)
திரியாய்
24. 12. 1969



கப்டன் மகேஸ்
(சு. முகுந்தன்)
திருக்கோணமலை
08. 11. 1968



கப்டன் குகன்
(ச. மகேந்திரன்)
யாழ்ப்பாணம்
10. 06.



2ஆம் லெப்.
சங்கர்
(இ. செல்வகுமார்)
வட்டுக்கோட்டை
19. 08. 1973



2ஆம் லெப்.
சாந்தன்
(மு. நியாஸ்)
நிலாவெளி
17. 05. 1972



வீரவேங்கை
பைரவன்
(இ. கணேசன்)
திருகோணமலை
02. 10. 1953



வீரவேங்கை
காந்தி
(சி. சிவராசா)
குச்சவெளி
22. 10. 1971



வீரவேங்கை
குமார்
(பு. சதீஸ்வரன்)
திருக்கோணமலை
01. 05. 1970



வீரவேங்கை
கருணா
(இ. வரதராஜா)
நிலாவெளி
17. 03. 1971

**1990 ஆம் ஆண்டு**
**திருக்கோணமலைக்**
**கடலில்**
**வீரச்சாவடைந்த**
**22**
**வீர**
**வேங்கைகளுக்கும்**

## எமது அஞ்சலி

இவர்கள், அலகால் இமயம் குடைபவர்;
இடியை இறக்கைகொண் டெற்றி எறிபவர்;
எரிமலை காலால் இடறிக் கிளறுவர்;
கடும்புயல் உருவிக் கடந்து பறந்தெங்கும்
புரட்சி செய்யும் ''புயற்பற வைகள்'

மதிசுரேஸ் கமலோடு, மகேஸ்ரகு நேமி
அன்ரன் குகனுடன். இல்பட் கிருபனே
சங்கர் அசோக்சாந்தன் மற்றும் - சொனிநவா
சின்ன மதிசுரேஸ் விஜிகுமார் பைரவன்
காந்தி கருணாவாம் இருபத் திருவர்,

எதிரிகள் அரணை எரியெழத் தாக்கி
படைக்கலம் பலவும் பாசறை யோடள்ளி
திருமலை பயலே கருங்கடல் அடியில்
ஒழித்தனர் குளித்தவன் உறங்குவர்!
வலம்படு மறவர் வாழியர் பல்லாண்டே!



லெப். கிருபன்
(கு. உதயகுமார்)
சாமபல்தீவு
24. 08. 1967



லெப். கில்பட்
(கு. கொன்ஸ்ரன்ரைன்ஸ்)
சாம்பலதீவு
19. 04. 1967



2ஆம் லெப்.
அசோக்
(பொ. லிங்கேஸ்)
திருக்கோணமலை
22. 07. 1965



2ஆம் லெப்.
நவா
(செ. யோகராசா)
கோபாலபுரம்



வீரவேங்கை
விஜி
(பொ. லர்போதரன்)
குச்சவெளி
03. 06. 1974



வீரவேங்கை
சின்னமதி
(வி. செல்வேந்திரன்)
கங்குவேலி, மூதூர்
19. 07. 1971



வீரவேங்கை
சின்னசுரேஸ்
(து. இராசேந்திரன்)
சாம்பல்தீவு
23. 04. 1967



வீரவேங்கை
ஜொனி
(நிமல்ராஜ்)
திருக்கோணமலை
23. 09. 1963

# அணையாத தீபங்கள்

"இவர்கள் திருமலைத்தாயின் அருமைக் குழந்தைகள்; அவள் கரங்களை இறுக்கிய விலங்கை நொறுக்க விடுதலைத் தீயிலே ஆகுதி ஆனவர்கள் ... வென்றே சாதித்தவர்கள்; வென்ற பின் சாவிலே கலந்தவர்கள் — எங்கள் வீட்டின் இருளகற்ற ஒளிபரப்பிய தீபங்கள் ... இவர்கள்!"

அந்தப் பிற்பகலின் வேளையிலே வேங்கைகள் மிகுந்த விரைவுடனும், பரபரப்புடனும் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். ஆயுதங்களை துப்புரவு செய்வதிலும் ... யூனிபோமை சரி செய்வதிலும், சப்பாத்துக்களை அணிவதிலுமாக அவர்கள் மும்முரமாயிருந்தார்கள்.

அவர்களின் குறி; ஜமாலியா என்ற இடத்திலே முகாமிட்டிருக்கும் E. N. D. L. F இனத்துரோகிகள். இந்த இனத்துரோகிகளால் எம்மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் ஒன்றிரண்டல்ல. வீதியிலே இளம் பெண்கள் நடமாட முடியாது ... தப்பித்தவறி தனியே வரும் சகோதரிகளின் நிலை துயர் மிகுந்தது. கசக்கி எறிந்த மலராக உயிரற்றுக் கிடந்த பல உடல்கள் இதற்கொரு சான்று. எம்மண்ணை ஆக்கிரமித்த இந்திய வெறிக் கூலிகளுடன் சேர்ந்து கூத்தடித்த இந்தத் துரோகிகள் பெண்களின் மாங்கல்யச் சரடுகளைக் கூட அபகரித்த கயவர்கள் — இவர்களின் ஜமாலியா முகாமை தகர்த்தெறிய இந்த வேங்கைகள் படகுகளை வந்தடைந்தார்கள்.

அந்த இரவு எங்களின் மனதை விட்டகலாதது; எங்களின் இதயத்தினை பலநூறு ஊசிகளால் துளைத்தெடுத்த அந்த இரவு எங்களின் திருமலை வரலாற்றிலே கண்ணீர்ப் பக்கங்கள்தான்.

அன்று மூன்று படகுகளிலே எங்களருமைப் புலிகள் ஆயுதங்களை மார்போடணைத்தபடி ... என்ஜினின் இரைச்சலூடாக இரைந்துபேசி விடைபெற்றுக் கொள்ள; படகுகள் நீரினைக் கிழித்தபடி கடலிலே செல்கிறது. பால் போன்ற நிலவு நீண்டதூரம் சென்றும் படகுகளை கண்ணில் காட்டியது. ஆயினும் சில நிமிட நேரத்தின் பின் படகுகள் ஆழ்கடலின் இருளிலே விரைந்து விட்டது.

அந்தப்படகுகள் மெல்ல மெல்ல ஜமாலியாக் கிராமத்துக் கரையை அண்மித்து கரையிலே நின்றன. உடனேயே விரைந்து கரையிறங்கிய வேங்கைகள் அடுத்து தம்மை தயார்படுத்திக் கொள்ள ... படகுகள் கடலின் கரைத் தண்ணீரிலே மிதந்தபடி தயார் நிலையில் நின்றன.

புலிகள் E. N. D. L. F முகாமை அண்மித்து .., கண்ணிமைக்கும் நேரத்தில் தாக்குதலை ஆரம்பித்தார்கள். சடசடத்த துப்பாக்கிகள் நெருப்பைக் கக்கி எதிரிகளின் தலைகளைச் சிதறடித்தது. ஏராளமான துரோகிகள் தலைதெறிக்க ஓடினார்கள் ... கூப்பிடு தொலைவில் அமைந்திருந்த இந்தியத் தளமான சிறிமாபுரம் நோக்கி அவர்கள் குய்யோ முறையோ என்று வீறிட்டபடி ஓடி மறைந்தார்கள்

இவ்வேளை கடல்நீரிலே தயாராய் நின்ற படகுகளில் ஒன்றின் சொந்தக்காரன் என்ன நினைத்தானோ?... ஏன் பயந்தானோ? படகோடு விரைந்து ஓடிவிட்டான். சில சமயங்களில் விதியின் கருவிகளாக மனிதர்கள் மாறிவடுவதுண்டு; படகோட்டி விதியின் ஒரு கருவியே.

வெற்றியுடன் கரைவந்த விடுதலை வீரர்கள்; ஏராளமான ஆயுதங்களையும், இராணுவ உபகரணங்களையும் இனத்துரோகிகளின் முகாமிலிருந்து கைபபற்றி வந்தார்கள். கரையிலே ஒருபடகு மறைந்து விட்டதைக் கண்டு அவர்கள் துயரடையவில்லை. கைப்பற்றிய ஆயுதங்கள் நூற்றுக் கணக்கானவை. அவற்றை படகுகளில் ஏற்றும் நேரம் சிறிமாபுரத்திலிருந்து இந்திய இராணுவம் தகர்த்தெறியப்பட்ட ஜமாலியா E. N. D. L. F முகாமிற்கு வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது.

இதனால் விரைந்து ஆயுதங்களை ஏற்றிவிட்டு தாமும் ஏறிக்கொள்ள; அந்த வீரர்களையும் ஆயுதங்களையும் சுமந்தபடி படகுகள் விரைந்து சீறிக்கொண்டு புறப்படுகின்றன.

சுமார் ஐந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை; கரை கண்ணிலிருந்து மறைவதற்கு முன்னேயே ... கடலரக்கனின் கொடிய கரங்கள் பேரலைகளாக பெரும் இரைச்சலுடன் பேயாட்டம் போட்டது.

ஒளியுடன் பிரகாசித்த நிலவுகூட மறைந்துவிட .., இரவுப் போர்வை ஆளையாள் தெரியாது திணறடிக்க ... படகுகளின் உள்ளே உப்புநீர் நிறைந்து போனது ... படகுகள் நீரினுள் மெல்ல அமிழ்ந்து கொண்டன. ஆயுதங்களின் கனமும ... அந்த வீரர்களும படகோடு நீரில் தத்தளித்தார்கள்.

அடுத்தடுத்து பேரிரைச்சலுடன் படகுடன் மோதிய அலைகள் படகை பலவாறும் உருட்டலாயிற்று ஆயுதங்கள் கீழே விழ ...... ஆயுதபாணிகளான வீரர்கள் அடித்துச் செல்லப்பட்டார்கள். இராணுவச் சீருடையும், சப்பாத்தும் நல்ல நீச்சறகாரர்களையும் விட்டு விடாமல அமிழ்த்திக் கொன்றது.

அவர்கள் பல சண்டைகளை வென்றவர்கள் .... ஒவ்வொரு கட்டத்தையும் மிகத்துயரோடு போராடி வென்றவர்கள். கொட்டும் மழையும் சில்லிட்ட பனியும் இவர்களின் அசைக்க முடியாத உறுதிகண்டு தோற்றோடின. இலைபபோர்வையும், புல்மெத்தையும், புழுதிக்காற்றும் போராட்டமான திருமலையிலே ... இந்த வீரர்கள் பருப்புடன் சோறாக்கித்தான் சரித்திரத்தில் நிலைத்த சண்டைகளை வென்று வந்தார்கள்.

வியர்வையை நீராயும் ... காய்கனியை உணவாயும் காட்டிலே வாழப் பழகி ... கிணறுதோண்டி பின்தோட்டமும் செய்து முன்னேறிய எங்களின் பெரும் போராட்ட வரலாற்றின் நாயகர்கள். இவர்கள் மண்ணின்தாசர்கள் ... மண்ணுக்காக மனை மறந்தவர்கள் கழுத்துச் சங்கிலியை எடுத்துவிட்டு; கறுப்பு நூலிலே சயனைட் மாட்டியவர்கள்.

ஒவ்வொரு விதையும் நிலத்திலே விழுந்துதான் பெரும் விளைச்சலைத் தருகின்றது. அந்த வகையிலே இந்த வீரர்கள் எங்களின் விடுதலைத்தோட்டத்திலே விதைக்கப்பட்டவர்களாயினர்.

கடல் அரக்கனின் கோரப்பிடியிலே உயிர்பிரிந்து; கரை ஒதுங்கிய அந்த இருபத்திரெண்டு வீர உடல்களும் ... மகத்தான சாதனைபடைத்தவை; இந்திய இலங்கைச் சிப்பாய்களின் உடல்களை நடுங்கச் செய்தவை: உயர் இராணுவத்தளபதிகளின் உள்ளத்தில் ஓட்டையை உண்டாக்கிய அந்த வீரபுருஷர்களின் உடல்கள் கரை மண்ணிலே கிடந்தன.

சேதி கேட்டு மக்கள் கூட்டம் கூடிற்று. இந்தியக்காவலை மீறி எம் தேசத்து மக்களின் கண்ணீர் அந்த வீர உடல்களில் முத்தென விழுந்தது.

அன்று இரவு அவர்களின் வருகைக்காக நாங்கள் கரையிலே காத்துக் கிடந்தோம்.

நீண்ட நேரமாகியும் தொடர்பில்லை ... படகுச்சத்தமும்கேட்கவில்லை.? மறுநாட் பொழுதும் புலரத்தொடங்கிற்று. எங்கள் வீரர்கள் என்னவாயினர்? நாங்கள் துயர எல்லையை எட்டிவிட்டோம். அவ்வேளை கடலரக்கனோடு போராடி பதினைந்து வீரர்களை காப்பாற்றியிருந்தான் மேஜர்: சிவதாஸ். மேஜர்: சிவதாஸ் 23-01-1992 அன்று 20 ஆயுதங்களை பெற்றுத்தந்த சலப்பையாற்றுச் சண்டையிலே வீரச்சாவெய்தினான். இருபத்திரெண்டு வீரர்கள் அன்று கடலிலே மாண்ட கதையை எங்களிடம் சொல்ல எஞ்சி வந்த வீரன்... சிறந்த படைத்தளபதியும்; சண்டைக்காரனுமான மேஜர்: சிவதாஸ்.

மறுநாட்பொழுது எங்களின் மங்கலான இதயங்களின் துன்பப்பெருமூச்சுடன் விடிந்தது. வெற்றியோடு வந்தவர்கள் விதியின் சதியால் கடலிலே மாண்ட கதை ... இன்று காவியமாயிற்று: சரித்திரமாயிற்று. ஆயினும் அவர்கள் ஓடிவிளையாடிய மண்ணும் ... உறுதியுடன் போராடிய களங்களும்: சிரிப்பும் பேச்சும் எங்களின் கண்ணிலே தான் நிற்கிறது.

ஒவ்வொன்றும் அழகான முகங்கள்... வீரத்தின் விளைவிடங்கள்: வெற்றி பெற்ற சாதனையாளர்கள்; வித்தாகிப்போன நாயகர்கள்.

கருணா ... விஜி ... பைரவன் ... சொனி ... நவா ... காந்தி ... சின்னமதி ... சின்னசுரேஸ் ... குமார் 2 ஆம் லெப்டினன்ட்; அசோக் ... 2 ஆம் லெப்டினன்ட்; சங்கர் ... 2 ஆம் லெப்டினன்ட்; சாந்தன் ... லெப்; கிருபன் ... லெப்; கில்பட் ... கப்டன்; நேமி கப்டன்; அன்ரன் .. கப்டன்; மகேஸ் .. கப்டன்; குகன் ... கப்டன்; ரகு ... மேஜர்; கமல் ... மேஜர்; மதி மேஜர்; சுரேஸ்.

இவர்கள் கலங்கடித்த களங்களும் கைகொண்டு உருவாக்கிய தளங்களும் புதிய போராளிகளின் பாலர் பாட வரலாறு. இந்த வீரர்களின் வரலாற்றுச் சுவட்டிலே; வளர்கின்ற புதிய வீரன் நடந்து வருகின்றான்.

இன்றைய தினத்திலே இருபத்திரெண்டு தாய்மாரின் கண்களும் மனமும் கண்ணீரைச் சிந்தலாம்; அது ஆனந்தக் கண்ணீர். ஈன்ற பொழுதிலும் உவகை கொள்வது மகனின் வீரச்சாவுச் செய்தியால்தான். தமிழீழ அன்னையர் அழுவதில்லை — அழுதாலும் அஃது ஆனந்தக்கண்ணீரே.

எங்களின் இருபத்திரெண்டு வீரர்களும் வகுத்த பல அதிரடித்திட்டங்களும் இன்று திருமலையிலே வென்றெடுக்கப்படுகிறது. அந்த வீரர்கள் எம்மோடில்லை எம்பாதையிலே அவர்கள் மரங்களாக நின்று நிழல் தருகிறார்கள். அவர்களின் நினைவோடு நாம் நடந்து செல்கிறோம்.

1985 ஆம் ஆண்டுதான் திருமலையில் விடுதலைப்புலிகள் ஆழக்காலூன்றி வீரமிகு விடுதலைப்போரை ஆரம்பித்தார்கள். திருமலையின் முதற் தளபதியும் .. முதுபெரும் கெரிலாப் போராட்ட வீரருமான லெப்டினன்ட் கேணல்; சந்தோஷம் மாஸ்டர் அவர்கள் தமது வாழ்வை அர்ப்பணித்து திருமலை மண்ணையும் மக்களையும் மீட்பதற்காக திருமலை வந்தார். அவரது பயிற்சிப்பாசறையில் தான் இந்த வீரர்கள் உருவானார்கள். தன்னை உருக்கி இவர்களை உருவாக்கிய சந்தோஷம் மாஸ்டரைப்போல இவர்களும் பலநூறு வீரர்களை உருவாக்கி உருகியவர்கள் தான்.

மேஜர்; கமல், மேஜர்; சுரேஸ், மேஜர்; மதி என ஒவ்வொரு வீரமிகு தளபதிகளையும், வீரர்களையும் நினைத்தால் . அவர்களின் காலடிபட்ட ஒவ்வொரு அடிமண்ணும் சொல்லும் கதை கேட்டால்; எங்களின் கண்ணிலே கண்ணீரே பதிலாகுமன்றோ.

இவர்கள் திருமலை மண்ணின் ஒவ்வொரு அடியையும் நன்கறிந்தவர்கள். அடர்ந்த பெருங்காடுகளும் அதன் மரங்களும் புள்ளும் மான்களும் நண்பர்களாக இவர்கள் காட்டு ராஜாக்கள் போன்று வீரநடை போட்டார்கள். எதிரில் வரும் எதிரிகளை எழுந்து நின்று தாக்கி . ஓட ஓட விரட்டியடித்து வெற்றியுடன் திரும்பும் இவர்களை . வரவேற்கும் வீரைமரநிழலும், பாலையின் பழங்களும் சொந்தக் காலம் முதல் சொக்கவிழுந்தான் என வெருகலின் கங்கை தரும் குளிர்ந்த நீரிலே தளித்துக்களித்த வேங்கைகளை உப்புநீர் உள்ளிழுத்துக் கொன்று போட்டதோ ..?

மகத்தான சண்டைகளில் சாதனையைப்படைத்து வந்த வீரர்களின் மரணம் மாகடலின் மத்தியிலே நிகழ்ந்ததுவோ?.... மண்ணிலே நின்று களம் பல வென்றவர்கள் உப்புக்கடலிலே ஓய்ந்து தான் போனார்களோ?... விடியும் வேளைவரை காத்திருந்த எங்கள் கண்களிலேயும் உப்புக்கண்ணீர்; இருபத்திரண்டுவீர உயிரும் கலந்ததும் உப்புத்தண்ணீர்.

எம் தேசத்து மண்ணை மீட்பதற்காக இளவயதின் எல்லையிலாக் குதூகல வாழ்விணைத்துறந்து; எல்லைக்காவலிற்கே வந்தபோது இவர்கள் சின்னஞ்சிறு பிஞ்சுப்பையன்கள்... இவர்கள் அப்போதே எதிரியை பிய்த்துப் போட்டார்கள். வருடங்கள் தேய வளர்ந்த தேகத்துடன்; வீரவிவேகமும் வரலாற்று வழிகாட்டலும் இவர்களை வேங்கையெனச் சிறவைத்தது.

திருமலையின் திக்கிலே நிகழ்ந்தவை; தீருவில் முதல் திருச்சிக்கும்... லண்டன், பிலிப்பைன்சுக்கும் சுடச்சுடப்பறக்க; இவர்கள் தீரமுடன் துப்பாகியால் சுட்டுச்சென்ற களங்கள் ஏராளம். மன்னாரிலே ஒரு விக்டர், மட்டு நகரிலே ஒரு குமரப்பா, திருமலையிலே இவர்கள்... எனச் சிங்களர்க்கு எரிமலைகளானவர்கள்.

எங்கே வெடியோசை கேட்டாலும் அது கமலின் குறூப்.. இது சுரேஸின் குறூப். இது மதியின் குறூப் என்று மக்களே கூறிடுவார்கள். கடைசியாக ஜமாலியாவின் இனத்துரோகக் கும்பலை கூறுபோட மூவரும் இணைந்து செல்ல... விதிக்கடல் விரித்த அலையிலே வீர உயிர்கள் வீழ்ந்து மடிந்ததே ..!

வென்றவர்களை வரவேற்றிட.. விரித்த விழிகளை விதிக்கடலின் பரப்பிலே பறக்கவிட்டுக் காத்திருந்தோம் .. ஆயிற்று! .. காலையும் விடிந்தது கதிரவனும் வந்தான்; கூடவே ஒரு தீயபிழம்பாக அந்தச் செய்தி. தீ சுட்டது போலுள்ளங்கள் துடித்தன. பற்கள் நறநறக்க .. கரங்கள் துடித்தன. விதியின் சதியுயே மாண்டவர்களை எண்ணிடும் போது கண்கள் ஊற்றெடுத்தது.

ஆம்! அவர்கள் திரும்பவில்லை... ஆழக்கடலிலே அவர்கள் உயிரைக் காலன் அபகரித்துவிட... கரையிலே ஒதுங்கிய வீர உடல்களின் மீது கண்ணீராலே எம்மக்கள் மாலையிட்டார்கள். அவர்கள் ஜமாலியாவை வென்றுவிட்டு ஜமனின் விதிவலையில் வீழ்ந்தவர்கள். அந்த வீரமிகு நாயகரின் வெற்றிப் பாதையிலே எங்களின் விடுதலை பிறக்கும்... பிரடெரிக் கோட்டையின் உச்சியிலே புலிக்கொடி பறக்கும். அன்று இவர்களின் ஆசையும் நிறைவேறும்.

"புலிகளின் தாகம்; தமிழீழத் தாயகம்."

- பதுமன்

# மக்கள்விரோதச் செயலில்தமிழக அரசு; ஜெயலலிதா மீதுவாழப்பாடி பாய்ச்சல்

(சென்னை)

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அரசாங்கம் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபடுவதாக தமிழக இந்திரா காங்கிரஸ்கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

அ. தி. மு. க அரசு அதிகாரத்துக்கு வந்ததுமுதல் காங்கிரஸ் கட்சி ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகவே செயற்படும் கண்மூடித்தனமான ஆதரவை அ.தி.மு.க அரசுக்கு கொடுக்கப் போவதில்லை. இதை நாம் என்றுமே கூறி வந்திருக்கிறோம்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வை எதிர்த்து அ.தி.மு.க அரசை வன்மையாக கண்டித்து அதன் நடவடிக்கை, செயற்படு தலை மக்கள் விரோத நடவடிக்கை என வர்ணித்துள்ள வாழப்பாடி தி மு க. அரசு, விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம் கூறியதோ அதையே இன்று அ.தி.மு.க. வும் கூறுகிறது என்றார்.

எம். ஜி. ஆர். பதினொரு வருட காலமாக தமிழகத்தில் ஆட்சி செய்த போது அரிசி விலையை கூட்டவில்லை பங்கீட்டு அரிசியில் ஒருபோதும் கைவைக்கவில்லை.

அண்மைக்காலமாக ஜெயலலிதா அரசு விலைகள்தொடர்பாக எடுத்திருக்கும் நடவடிக்கையானது அ. தி மு. க வினதும் அதன் நேச அணியான எமது காங்கிரஸினதும் ''இமேஜில்'' பாதிப்பை ஏற்படுத்தும் இதற்கு மத்திய அரசை குற்றம்சாட்டுவதால் எந்தவித பிரயோசனமும் இல்லை எனவும் தெரிவித்தார்.

## கோவை வீடொன்றில் வெடிப் பொருள் சில மீட்பு

கோவைமாவட்டத்திலுள்ள அன்னூர் கிராமத்தில் ஒரு வீட்டைச் சோதனையிட்ட தமிழகப் பொலிசார் வெடி மருந்துப் பொருளான ஜெலட்டின்குச்சிகள் இருக்க கண்டுபிடித்துள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். முந்நூற்று அறுபத்தாறு ஜெலட்டின் குச்சிகள், முந்நூறு டெட்டனேட்டர்களும் நூற்றி இருபது பியூஸ் வயர்களும் கண்டெடுக்கப்பட்டதாக பொலிசார் கூறியுள்ளனர்.

## கால்நடை வைத்திய பயிற்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வைத்தியம் சம்பந்தமான தொடர் பயிற்சி வகுப்புக்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் ஒழுங்கு செய்து நடத்தி வருகிறது. கால்நடை நோய்த் தடுப்பு, பராமரிப்பு, கால்நடைகளில் விருத்தி பற்றிய விளக்கங்கள் இப் பயிற்சி வகுப்பில் வழங்கப்படுகிறது முதற் கட்டமாக இப் பயிற்சி வகுப்பை பூர்த்தி செய்தவர்கள் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடுதல், மற்றும் கால்நடைவளர்ப்போருக்குஆலோசனைவழங்கிஅவர்களை ஊக்குவித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

இம்முயற்சியின் மூலம் கிராமப் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி போன்றவற்றில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மேஜர் குகன்
இராமலிங்கம் சிவஞானம்
புதுக்குடியிருப்பு, உயிலங்குளம் (06-10-67)



லெப். கேணல் வேணு
(மன்னார் மாவட்டத் தளபதி)
பிரான்சிஸ் றொபேட் சேவியர்
ஆண்டான்குளம் (பிறப்பு 19-10-64)



மேஜர் சயந்தன்
தங்கராசா ராஜமோகன்
உப்புக்குளம், மன்னார் (09-03-69)



கப்டன் குட்டிமணி
அருளானந்தம் றேமன்
பேசாலை (27-10-70)

உங்கள் நினைவை நெஞ்சிலும்
ஆயுதங்களைகைகளிலும் சுமக்கின்றோம்!
உங்கள் கனவை நனவாக்கும் வழியில்
தலைவனின் பின்னால் நடக்கின்றோம்!

06.01.92 அன்று வங்காலை மாதிரிக்கிராமம் என்னும் இடத்தில் வாகனகண்ணிவெடி வைக்கும் போது எதிர்பாராத விதமாக நடந்த வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த

## இவர்களுக்கு எமது வீர வணக்கம்!

- நண்பர்கள்

(2186)

## சிந்தனைக்கு

நாம் நமது செயல்களைத் தீர்மானிக்கும் அளவுக்கு, நம் செயல்களும் நம்மைத் தீர்மானிக்கின்றன.

- ஜார்ஜ் ஈலியட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 06-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# தமிழகத்திற்கொரு 'பொலிஸ் அதிகாரி'

ஊர்வலங்கள் மற்றும் பேரணிகளின் போது, வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற மாட்டாது என்றும், மீறி நடந்தால் சேதமடையும் சொத்துக்களுக்கான இழப்பீட்டுத் தொகையை தி.மு.க. அளிக்கும் என்று எழுத்து மூலமான உத்தரவாதம் தரப்பட்டால் மாத்திரமே இனிமேல் தி.மு கவினர் ஊர்வலம். மற்றும் பேரணிகள் நடத்துவதற்கு அனுமதியளிக்கப்படுவர் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதாவின் இப்புதிய நிபந்தனைகளைத் தமிழக எதிர்க்கட்சிகள் பல - இந்திரா காங்கிரஸ் தவிர — கண்டித்துள்ளன. இந்நிபந்தனை மக்கள் ஆட்சித்தத்துவத்திற்கே முரணானது. அடிப்படை உரிமைகளை வழங்கும் அரசியல் சாசனத்திற்கே எதிரானது என அவை செய்தியாளரிடம் கூறியதோடு, இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளன.

செல்வி ஜெயலலிதா 'டடா' சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளை ஒடுக்குவதாக பரவலாகவே குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. இதை உறுதிப்படுத்தும் விதமாக ராஜீவ் காந்தி கொலை வழக்கு, பத்மநாபா கொலை வழக்கு என்ற பெயரில் அரசியல் எதிரிகள் பலர் — குறிப்பாக தி.மு.க வினர் — கைது செய்யப்பட்டும் வருகின்றார்கள்.

இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் எந்தக்கட்சியாயினும் பேரணிகளையோ அன்றிமறியல், உதவடைப்புப் போராட்டங்களையோ நடத்தினாலும் பொதுச் சொத்துக்குச் சேதம் ஏற்படுவதென்பது ஓர் வழக்கமான நடவடிக்கை. பெரும்பாலும் போக்குவரத்து வாகனங்களே தாக்கப்படுகின்றன. ஆனால், ஏற்படும் வன்முறைகளுக்கு ஊர்வலங்கள், பேரணிகள் என்பனவற்றை ஏற்பாடு செய்பவர்கள் மட்டும் தான் காரணம் என்பதல்ல. எதிரணியினரும், காவல்துறையினரும் காரணமாக இருப்பதுமுண்டு.

இந்நிலையில், தமிழக ஏன் இந்தியாவின் பாரம்பரியத்தையே மாற்றும் வகையில், செல்வி ஜெயலலிதா தி.மு.கவிற்கு மட்டும் விதித்துள்ள தடையானது. ஆளும் அ.தி.மு.க. அரசிற்கெதிரான போராட்டங்களை அதிகாரத்தைக் கொண்டு அடக்கி ஒடுக்கும் ஓர் நடவடிக்கை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், செல்வி ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் அதிகரித்து வரும் பொலிஸ் அடக்குமுறையும், அதிகாரத்துஷ்பிரயோகமும் பற்றி எதிர்ப்புக்கள் கிளம்ப ஆரம்பித்துள்ள வேளையில் செல்வி ஜெயலலிதாவின் இந்த அறிவிப்பானது தமிழ் நாட்டில் மேலும் அரசியல் நெருக்கடியை அதிகரிக்கும் என்பதே உண்மை.

கடந்த தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றிருப்பினும், தற்பொழுது அமுல்படுத்தியிருக்கும் டடா சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களால் ஜனநாயக ஆட்சி நடைபெறப் போவதில்லை. இது பொலிஸ் ஆட்சிக்கே வழிவகுக்கும்.

உணர்ச்சிகரமான ஒரு கால கட்டத்தில் நடந்ததேர்தலில் ஏதோ ஒரு போலியாக எழுப்பப்பட்ட அனுதாப அலையின்காரணமாக தேர்தலில் வெற்றி பெற்றுவிட்ட செல்வி ஜெயலலிதா எதிர்காலத்திலும் மக்கள் உணர்ச்சிகளைக் கிளறி வாக்குகளைப் பெறலாம் என எதிர்பார்க்க முடியாது.

இந்தியாவில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மிசா சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் அடிப்படை உரிமைகளில் கைவைத்த இந்தியாவின் பெருமைமிக்க பிரதமர்களில் ஒருவரான இந்திரா காந்தி அவர்கள் 1977இல் தமது தேர்தல் தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டதை செல்வி ஜெயலலிதா மறந்து விடக்கூடாது.

அதேவேளை, இந்திராகாந்தி கொல்லப்பட்ட அனுதாப அலையில், அதாவது உணர்ச்சிகர பிரசாரத்தால் இந்திய அரசியல் வரலாற்றிலேயேபெரும்பான்மையான ஆசனங்களை வென்று ராஜீவ்காந்தி தலைமையில் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், பின்னர் அடுத்ததாக வந்த தேர்தலில் ராஜீவ்காந்தி தலைமையிலான இ.காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டதையும் செல்வி ஜெயலலிதா நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி இவற்றை மறந்து செல்வி ஜெயலலிதா செயற்படுவாரேயானால், அடுத்த முறை தேர்தலில் அவரை ஹைதராபாத்தில் ஓய்வெடுக்க தமிழக மக்கள் அனுப்பி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# ஊவா சம்பவங்களில் புதிய ஐயப்பாடுகள்

ஊவா பகுதி வாழ் தமிழர்களை பயங்கரவாதிகள் என்ற புதிய பட்டம் சூட்டி அல்லற்படுத்துவதற்கான பணியில் பல சக்திகள் பல்வேறு மட்டங்களில் இருந்து இன்று முனைப்பாக செயல்பட்டு வருகின்றன. இச்சக்திகளின் செயற்பாடுகளால் அப்பாவி பொதுமக்கள் துன்புறுத்தப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும், அலைக்கழிக்கப்படுவதுமான சம்பவங்கள் தட்டிக் கேட்பாரின்றி நடைபெறுகின்றது.

மலையகத்தில் அமைதி தொடர்ந்தும் பேணப்படுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

இது ஒருபுறமிருக்க ஊவா பகுதி தோட்டங்களுக்குள் சீருடை போன்று உடையணிந்தவர்கள் புகுந்து பொலிசார் என்று கூறி பயமுறுத்துவதும், கொள்ளையடிப்பதும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது, பதுளை ஸ்பிரிங்வெளி ஆறாவது டிவிஸனில் புகுந்த ஆயுதபாணிகளான சீருடை போன்ற உடை அணிந்த ஒரு கோஷ்டி 28 தங்க நகைகள் உட்பட பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

தற்போது இப் பகுதியில் அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்களைப் பார்க்கும் பொழுது தருணத்தை சாதகமாகப் பயன்படுத்தி திட்டமிட்டு சில தீய சக்திகள் செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

நமுனுகலை இந்துகல் தோட்டத்தில் இடம்பெற்ற சீருடை போன்ற உடையணிந்த ஒரு கோஷ்டி நடத்திய சம்பளப்பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கூட ஊவா மாகாணத்தில் தற்போது ஐயப்பாடுகளை தோற்றுவித்துள்ளது. இதுவும் தீய சக்திகளின் செயற்பாடுகளில் ஒன்றுதானா எனஊவா பகுதி தமிழர்கள் சந்தேகிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஊவாவில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் இருப்பதாகவும் ஊவாப் பகுதி வாழ் தமிழ் மக்களில் பலர் விடுதலைப் புலிகளினால் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர் என்றும் கதைகளைப் பரப்பி அமைதியின்மையை ஏற்படுத்தி இனங்களுக்கிடையிலான ஒரு பதற்ற நிலையை உருவாக்குவதை நோக்காகக் கொண்டே இச்சக்திகள் செயற்பட்டு வருகின்றதாக ஊகிக்க முடிகிறது.

அமைதியின்மையைப் பயன்படுத்தி கொலை கொள்ளையில் ஈடுபடுவதும் இதனை விடுதலைப் புலிகளும் அவர்களுடன் தொடர்புடைய மலையக மக்களுமே செய்தனர் என பாதுகாப்பு பிரிவினரையும், பெரும்பான்மை இன மக்களையும் நம்பச் செய்வதுமே இச்சக்திகளின் நோக்கமாக உள்ளதென அங்கு விஷயமறிந்தோர் அடித்துக் கூறுகின்றனர். ஊவா மகாணத்தில் தொடர்ந்து இடம்பெறும் ஆயுதபாணிகளான சீருடை போன்ற உடையினரின் கொள்ளைகள் இதனை தெளிவு படுத்தாமலுமில்லை.

அதேவேளையில் இவ்வாறு இடம் பெற்ற கொள்ளைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மலையகம் சார்ந்தவர்களோ அல்லது விடுதலைப் புலிகளோ அல்ல என்பதும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

இந்த கலை கொள்ளையில் கூட தோட்டத் தொழிலாளர்களோ அல்லது விடுதலைப் புலிகளோ சம்பந்தப்பட்டிருக்க முடியாதென்றும் தீய சக்திகளின் செயற்பாடுகளில் ஒன்றாக இது இருக்கலாம் என்றும் பல்வேறு மட்டங்களில் கருத்து நிலவுகின்றது.

எனினும் இன்றைய ஊவா நிலைமை அமைதியின்மையை மாத்திரமல்ல இன வன்செயல் தோன்றுவதற்கான சகல குணாம்சங்களையும் கொண்டுள்ளதாகவும் இம் மட்டங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறான பய, பீதி ஊவா பகுதி வாழ் தமிழ் மக்களிடையே தற்போது நிலவுகின்றது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள், ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஊவாவில் பலர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டவர்கள் போக எஞ்சிய 49 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 40 பேர் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். நான்கு பெண்கள் உட்பட ஒன்பது பேர் தொடர்ந்தும் பதுளையில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் ஏழு பேர் தோட்டத் தொழிலாளர்கள். மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆசிரியர்கள் ஐந்து பேர், வர்த்தகர்கள் ஏழு

## தேவராஜ்

பேர், ஒரு சப் இன்ஸ்பெக்டர், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள், மாணவர்கள் ஐந்துபேர் கொழும்பில் கடையில் வேலை செய்பவர்கள் இருவர், துறைமுக ஊழியர் ஒருவர், புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர், மர வேலை செய்பவர் ஒருவர் பூக்கடை வைத்திருப்பவர் ஒருவர் தோட்ட சேவையாளர் ஒருவர் என பலதரப்பட்டவர்கள் அடங்குகின்றனர்.

இவர்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்கும் போது இவர்களுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் பயங்கரவாதிகளுககும் இடையில் தொடர்பிருக்குமோ என்று ஒரு முறையல்ல ஆயிரம் முறை கேள்வி கேட்கத் தோன்றுகிறது,

''நான் ''டெயிலர்'' எனது பெயர் யாரோ ஒருவரின் டயரியில் இருந்ததாம், அதற்காக என்னை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்'' என்கிறார் காவலிலுள்ள ஒரு இளைஞர்.

'அவரின் பெயர்தான் டயறியில் இருந்தது எனது பெயர் இல்லை. ஆனால், நான் அவரின் சகோதரன். அதனால் நான் தடுத்து வைக்கப் பட்டுள்ளேன்'' என்றார் அவரது சகோதரன்.

இவரின் இன்னொரு சகோதரனும் இதனையே கூறினார்.

-'நான் கொழும்பில ஒரு கடையில் வேலை செய்கின்றேன். நீண்ட காலத்திற்குப் பிறகு தற்போது தான் வீட்டிற்கு வந்தேன். இங்கு வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்து விட்டனர்'' என்றார் கண்ணீருடன் மற்றொருவர்,

''நானும் கொழும்பில் கடையில் தான் வேலை செய்கின்றேன், தீபாவளிக்குக் கூட வீட்டுக்கு வரவில்லை என்பதால் வீட்டுக்கு பெற்றோரைப் பார்க்க வந்தேன், நானும் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன்'' என்றார் அடுத்த வாலிபர்,

''எங்களுக்கு எந்த வன்செயல்காரருடனும் தொடர்பில்லை. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் எங்களது பெயர்களைக் கூறினாராம். அதற்காகஎங்களைத் தடுத்து வைத்துள்ளனர். நாங்கள் பதுளையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அந்நபரை ஆத்திரம் தாளாது பேசினோம் அதற்கு அவர் உங்கள் பெயர்களை நான் வேண்டுமென்று கூறவில்லை. உனக்குத் தெரிந்த பெயர்களைக் கூறு என்று கூறினார்கள். எனக்குத் தெரிந்தவர்கள் நீங்கள் தான். அதனால் தான் உங்கள் பெயர்களைக் கூறினேன் என்று அந்நபர் கூறினார்.''

தாம் கைதானதற்கு இவ்வாறு விசித்திரமான காரணம் கூறினர் பல தமிழர்கள்.

''என்னுடைய பெயர் கடவுளின் பெயரைக் கொண்டது. தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் ஐயோ கடவுளே! சிவபெருமானே என்னைக் காப்பாற்று எனக் கூறியிருக்கிறார். அந்நபர் என்னைத்தான் கூறியதாக நினைத்து என்னையும் பிடித்துக் கொண்டனர்'' எனக்கூறினார் மகஸின் சிறையிலுள்ள ஒரு ஊவாப் பகுதி வாலிபர். இவ்வாறு ஒவ்வொருவரும் தாம் தடுதது வைக்கப்பட்டதற்கான காரணத்தை சோகக் கதையாக கண்ணீருடன் தெரிவித்தனர். ஒவ்வொன்றும் நம்ப முடியாத காரணங்களாக இருக்கின்றன

இவ் விடயம் தொடர்பாக ஊவாவில் அமைந்துள்ள சில அரசியல் தொழிற்சங்கவாதிகள் என்ன கூறுகின்றனர்?

''தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பில்லையென எவ்வாறு கூறுவது? ஜே.வி.பி நடவடிக்கையின் போது தமிழ் பையன்களும் போஸ்டர் ஒட்டினார்கள் தானே!'' எனக் கூறினார் தொழிற் சங்கமொன்றின் முக்கியஸ்தர்.

''ஜே.வி.பி நடவடிக்கையின் போது அரசாங்கமே செயலிழந்திருந்தது தோட்டங்களில் நிர்வாகிகள் அவர்களின் துண்டுப் பிரசுரங்களுக்கு பணிந்து வேலைகளை நிறுத்தினர் இந்நிலையில் பயத்தில் சிலர் ''போஸ்டர்'' ஒட்டியிருக்கலாம்'' என்கிறார் மற்றொரு தொழிற்சங்கவாதி.

''இவர்களை எல்லாம் பிடிபபதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? இவர்கள் வெளியில் இருந்தால் நீங்கள் தலைவராக தொடர்ந்திருக்க முடியுமா? அல்லது நான் தான் இந்நிலையில் தொடர்ந்திருக்க முடியுமா?'' இரு அரசியல் தொழிற்சங்கவாதிகளிடையே நிகழ்ந்த சம்பாஷணை இது.

''அமைச்சர் தொண்டமான் இப்பிரச்சினையில் தலையிட்டதினால் தான் இது இவ்வளவு தூரம் வளர்ந்தது போதாக்குறைக்கு ஜனாதிபதியிடமும் அவர் முறையிட்டுள்ளார், பேசாமல் இருந்திருக்கலாம், நாங்கள் கதைத்து முடித்திருப்போம்''

இது ஊவாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 பேரையும் கொழும்புக்கு கொண்டு வர இருந்த பொழுது ஒரு தொழிற்சங்கவாதி கூறிய வார்த்தைகள்,

இவைகளின் மூலம் ஊவாப் பகுதி தமிழ் அரசியல் தொழிற்சங்கவாதிகளின் மனங்களைத் திறந்து பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

இவைகளுடன் அரசியல்,

( 3ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் வேணு நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வங்காலை மாதிரிக் கிராமத்தில் நடந்த எதிர்பாராதவெடி விபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மன்னார் மாவட்ட தளபதி உட்பட நான்கு வீரவேங்கைகளினதும் முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை ஏழு மணிக்கு கோப்பாயில் நடைபெறவுள்ளது.

இச்சம்பவத்தில் வீரச்சாவை தழுவிக் கொண்ட லெப். கேணல் வேணு, மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பல முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொள்கின்றனர்.

# எல்லையை தாண்டினால் விளைவு பாரதூரமாகும்

## இந்தியாபாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

[டில்லி]

இந்திய - பாகிஸ்தான் எல்லைகோட்டை மீறி எவராவது இந்தியாவினுள் நுழைந்தால் அதனால் பாரிய விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இந்திய வெளியுறவு செயலர் ஜே. என். டிக்சித் பாகிஸ்தான் தூதுவர் அப்துல் சதாரிடம் இந்த எச்சரிக்கையை தெரிவித்தார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி தீவிரவாத ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 50 ஆயிரம் தொண்டர்கள் ஜம்மு காஷ்மீருக்குள் நுழைய இருப்பதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இதேவேளை ஏ. கே. என். எவ். அமைப்பு எல்லைக் கட்டுப் பாட்டுக் கோட்டை கடப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை என்று பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் ராவல் பிண்டியில் கூடிய உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் கூட்டமொன்றில் இத்தகைய செயலால் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஆயுதச் சண்டை உருவாகக் கூடிய நிலை உண்டாகலாம் என்று முடிவெடுத்ததால்இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

## எழிலகம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஓராண்டை நிறைவுசெய்யும் முகமாக எழிலகம் ஸ்தாபனத்தார் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சில பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இவ் வைத்திய சாலையின் விசேட சிகிச்சைப் பிரிவிற்கு சிகிச்சை தினவிபர அட்டை மருந்து விபரப்புத்தகம், மருந்துச்சிட்டை ஆகியவற்றையே இவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர். (ச)

# வெளியார் தலையீடு இனப்பிரச்சினை தீர்க்காது

## பிரிட்டிஸ் தூதுவர்

(கண்டி)

'பல வருடகாலமாக நீடித்து வரும் வடக்கு, கிழக்கு பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்பதால் வெளியார் தலையீடு இதில் சாத்தியமில்லை. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் நல்நோக்குடன் தீர்வுக்காக முயற்சிக்காவிடில் தீர்வு காண்பது இயலாதகாரியம் ஆகிவிடும்' என இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் எட்வர்ட் கோன்பீல்ட் கண்டிக்குச் சென்றபோது மல்வத்தை பீடாதிபதி வண.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இனவாத பிரசாரத்தில் 'ஹெல உறுமய' தீவிரம்

## சு. கட்சி தலைமைக்கு சங்கடம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் திலக் கருணரெட்ளா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஹெல உறுமய (தேசிய பாரம்பரியம்) என்ற பெயரிலான அணி இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் எஸ். தொண்டமான் முன்வைத்த தீர்வுத் திட்டத்திற்கு எதிராகத் தீவிர பிரசாரம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வியாழக்கிழமை சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இல்லத்தில் கூட இருக்கும் சுதந்திரக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் ஹெல உறுமய அணியைப்பற்றி ஆராயப் படவிருப்பதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சுமார் நாற்பது டேர் சேர்ந்துள்ள இந்த அணிக்கு மேலும் பலர் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் இந்த அணி தொண்டமானின் தீர்வுத் திட்டத்திற்கு எதிராக ஒரு வெகுஜனப் போராட்டத்தை நடத்த தயாராகி வருவதாகவும் சொல்லப்படுகின்றது.

திலக் கருணரெட்னா கட்சியில் இருந்து கொண்டே தொண்டமானுக்கு எதிரான நேரடிப் போராட்டத்தில் இறங்குவது சுதந்திரக்கட்சி சிங்களவர்மத்தியில் இனவெறியைக் கிளறிவிடும் கட்சி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்று தலைமைப்பீடம் அஞ்சுவதாகத் தெரிகிறது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மனித உரிமைகள்மீறல் ஆகியவற்றை எதிர்த்து ஹம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நடத்தவிருக்கும் கதிர்காம பாதயாத்திரை பற்றியும் மத்திய குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

# யாழ். ஆசிரியர் சம்பளம் வங்கியில் இடப்பட்டது

யாழ். மாவட்ட ஆசிரியர் மன்றம் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளப் பணம கொழும்பு மத்திய கல்வி அமைச்சினால் வங்கியில் இடப்பட்டதாகத் தெரிவிகிறது.

ஆசிரியர் சம்பளத்துக்குத் தேவையான கட்டு நிதி 21 மில்லியன் ரூபாவும், ஊழியர்களுக்கான கட்டுநிதி 02 மில்லியன ரூபாவும் கொழும்பு இலங்கை வங்கியில் இடப்பட்டிருப்பதாகவும் இதை யாழ். இலங்கை வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு உறுதி செய்து சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சு யாழ். கல்வித்திணைக்களத்தைப் பணித்துள்ளது,

இது நேற்று உறுதி செய்யப்பட்டதாகவும் சம்பளத்தை வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். கல்விப் பணிப்பாளர் அனைத்துக் கோட்டக் கல்வி அதிகாரிகளையும் கேட்டுள்ளார். இன்று ஆசிரிய சம்பளம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஓய்வூதியம்

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 100 ருபா மாதாந்தச் சம்பளம் அதிகரிப்பு ஓய்வூதியம் பெறுவோருக்கும் இம் மாதம் முதல் வழங்கப்படும்.

ஜனவரி மாதத்திற்கான நிலுவை 100 ரூபாவும் இம் மாதக் கொடுப்பனவுடன் கிடைக்குமென ஓய்வுதியத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## லெப். நித்திலா நினைவாக கலைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

லெப். நித்திலாவின் பிறந்த தினத்தை நினைவு கூரும் முகமாக இன்று காலை 8.30மணியளவில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அரியாலை கிழக்கு பூம்புகாரில் அமைந்துள்ள நித்திலா கல்விக் கூடத்தில் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். இக்கல்விக் கூடத்தில் கல்வி பயிலும் சிறார்களே இந்நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர். கிராமிய பொருளாதார வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் செல்வி மிதுலா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

## யாழ்- குடா

கரைப்பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் உட்பட வயது வேறுபாடற்ற அனைத்துத்தரப்பு மக்களும் அவ்வப் பகுதிகளில் இருந்து ஒன்று கூடி பல்வேறு வீதிகளுடாக யாழ். அரச செயலகத்தை வந்தடைந்தனர். செயலகத்தை வந்தடைந்த மக்கள் அரைவட்ட வடிவில் வியூகம் அமைத்து செயலகம் முன்பாக மறியற் போராட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவதில் தமிழீழக்காவற்றுறையினரும், சாரணர் படைப் பிரிவுகளும் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

நண்பகல் 12.30 மணிவரை தொடர்ந்த இப்போராட்டங்களில் சுமார் 43 வெகுசன அமைப்பு ஒன்றியங்களின் கீழ் செயற்படும் 2000 வரையிலான பொது மக்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் பங்கு பற்றினர்.

இப் போராட்டத்தின் இறுதியில் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் திரு. சிறில் எட்டு அம்சக்கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்க வாசகரிடம் கையளித்தார். மகஜரைப் பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் மக்கள் கூட்டத்தின் மத்தியில் உரைநிகழ்த்தினார். நானும் உங்களில் ஒருவன் என்ற வகையில் யாழ். மக்கள் எதிர்நோக்கும் அனைத்து நெருக்கடிகளையும் நன்கு உணர்கிறேன் என்றும், இம்மகஜரை வெகு விரைவில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பிவைக்க இருக்கிறேன் என்றும் பதவி ஏற்ற நாளில் இருந்து மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகள் குறித்து அரசுக்கு எடுத்துக் கூறிவருவதாகவும் அவர் கூறினார். மேற்படி மகஜரின் பிரதி ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட்டது. (க)

## அட்டூழியங்

இவ்வாறு தமிழீழ வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில்தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை ஊர்வலமாகச் சென்ற யாழ். குடாநாட்டு மக்கள் யாழ்.செயலகம் முன்னால் மறியல் போராட்டத்தை நடத்திய பிறகு ஜனாதிபதிக்கு அனுப்பும்படி கோரி, யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரிடம் மகஜரைக் கையளித்தனர்.

பெற்றோரை இழந்த பிள்ளைகள், விதவைகள், குடும்பத்தலைவனில்லாத குடும்பங்கள், தொழிற்சாலை வீடுகளின் இடிபாடுகள், அழிவுற்ற கிராமங்கள் மற்றும் இடிந்து சிதைந்த தேவாலயங்களும், கோயில்களும், பள்ளிக்கூடங்களும் இந்தக் கொடூர யுத்தத்தின் விளைவுகளாகும்.

1983-ல் இருந்து அப்பாவிப் பொது மக்களைப் படைகள் கொலை செய்வதும், அழிப்பதும், அனர்த்தங்கள் புரிவதும் அன்றாடம் நடைபெறும் சம்பவங்களாகும். அண்மைக்காலக் கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழு 67 பேர் இறந்ததாக உறுதிப்படுத்தியுள்ளது. காணாமற் போன 60 பேர் பற்றிக் கணக்கில் எடுக்கப்படவில்லை.1987 இல் இதே கிராமத்தில் செரத்தீப் கடல்-உணவுத்தொழிற்சாலையில் பெண்களும் குழந்தைகளுமாக 23 பேர் இராணுவ அதிரடிப் படையினரால் சுட்டுத் தள்ளப்பட்டனர். இப்படியான கட்டுப்பாடின்மையும், கொடூரத்தன்மையும் ஒருநாட்டின் இராணுவத்தில் உள்ளதென்றால் இங்கு காட்டு தர்பார் தான் நடைபெறுகிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் அனர்த்தங்களையும், படுகொலைகளையும் வன்மையா

## குற்றப்பத்திரிகை

செய்தியாளர்களிடம் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் சென்னை விசேட நீதிமன்றத்தின் உத்தரவுகளை ஏற்று பிரபாகரனோ, பொட்டம்மானோ சரணடைவார்கள் என்ற மாயை எதையும்விசேட புலனாய்வுக்குழு கொண்டிருக்கவில்லை எனவும், எனினும் விசேட நீதிபதியின் இந்த உத்தரவு இந்தியாவிலோ அல்லது உலகின் எப்பகுதியிலுமோ வாழும் சட்டத்தை மதிக்கும் எவரோடும்பிரபாகரன்தொடர்பு கொள்வதை தடுக்கக் கூடியது எனவும் குறிப்பிட்டார்.

கக் கண்டிக்கும் அந்த மகஜரில் பின்வரும் கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன.

- ★ அனைத்துப் பொருளாதாரத் தடைகளையும் நீக்குதல்
- ★ தமிழ்க்கிராமங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறுதல்
- ★ இராணுவம் வெளியேறிய பிறகு அந்தக் கிராமங்களில் மக்களை மீளக் குடியமர்த்தல்
- ★ இராணுவம் முகாமிட்டிருக்கும் பாடசாலைக் கட்டடங்களிலிருந்துஇராணுவம் உடனடியாக வெளியேறுதல்
- ★ போக்குவரத்து வழமைக்குத்திரும்பும் வகையில் பெற்றோலிய,உற்பத்திப் பொருள்கள் மீதான தடையை நீக்குதல்
- ★ ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வகைகளை கிரமமாக அனுப்புதல்
- ★ மருந்துவகைகள், இரசாயன உர, கிருமிநாசினி ஆகியவற்றை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல உள்ள தடையை அகற்றுதல்
- ★ இராணுவ நடவடிக்கையினால் மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளை மீளவும் இயங்க வைத்தல்

மகஜரின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதிக்கும் மற்றும் கொழும்பிலுள்ள சுமார் ஐம்பது வெளிநாட்டு தூதராலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# 22 மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

திருக்கோணமலை நகருக்கு அண்மையாக யமாலியா என்னும் இடத்தில் தேசவிரோதக் கும்பலொன்றின் முகாமொன்றை கடல் வழியாகச் சென்று வெற்றிகரமாகத் தாக்கி நிர்மூலமாக்கி விட்டு திரும்பி வரும் போது கடல் கொந்தளிப்பால் வீர மரணத்தை தழுவிக் கொண்ட இருபத்திரண்டு மாவீரர்கள் ஞாபகார்த்த நினைவஞ்சலிக் கூட்டம் மட்டுவிலில் இடம் பெறவுள்ளது.

மட்டுவில் கிராமத்தில் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் அஞ்சலிக் கூட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்பாளர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## வீரச்சாவு

வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வெளிநாட்டுச் செய்தியாளர்

பி. பி. ஸி மற்றும் சிலவெளிநாட்டு செய்தியாளர் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்துள்ள இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெகுசனப் போராட்டத்தினையும் நேரில் அவதானித்தனர்.

## உணவுவிற்குத்

களை விட்டு சிங்கள இராணுவமே வெளியேறு, சிறிலங்கா அரசே தீவகம் என்ன உன் சீதனமா, தீவகத்தை விட்டு வெளியேறு, எமது மண்ணை நாமே ஆளுவோம், சிங்கள இராணுவமே எமது சொந்த மண்ணல் எம்மை அகதிகள் ஆக்காதே, உதவி வழங்கும் நாடுகளுக்கு உத்தமனாக நடிக்காதே, பட்டினிச் சாவிற்கும் அடிபணிய மாட்டோம், தமிழர் வீடுகளில் சிங்களவரைக் குடியேற்றாதே, பதுங்கு குழிகளிலும் பள்ளி நடக்கும், மாணவர் கல்வியை மதித்து நட, தெற்கில் புலமைப் பரிசில் வடக்கில் நேபாம் குண்டு, அப்பாவி மக்களின் கண்ணீர் அணுகுண்டிலும் பொல்லாதது, கல்வியை அழிக்க உன்னால் முடியாது, மறியல் போராட்டம் தமிழ் மக்களின் போராட்டம். (க, ச, 82)

## காணாமற்போன

போயுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழு அறிக்கை வெளியிட்டது தெரிந்ததே. இக் காணாமல்போன பொதுமக்கள் தொடர்பாக இத்தூதரகங்கள் அரசை வற்புறுத்தும் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை எம்பிலிப்பிட்டிய என்னுமிடத்தில் 1989, 1990 ஆம் ஆண்டுப்பகுதிகளில் காணாமல் போன முப்பத்திரெண்டு பள்ளிச் சிறுவர்கள் குறித்து விசாரணை நடத்துமாறு இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இபபததிரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி யாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.